விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 100 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 15 வியாழக்கிழமை (28.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வடக்கின் பல்வேறு பகுதிகளில் நேற்று கடும் மழை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உட்பட வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று காலை முதல் மதியம் வரையில் கடும் மழை பொழிந்தது.

கடந்த சில வாரங்களாக வடக்கில் கடும் வெப்பமான காலநிலை நிலவி வந்த நிலையில், நேற்றைய தினம் மழை பொழிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த மழைவீழ்ச்சியினால் வெள்ளை ஈ தொற்றி 15

## முல்லை சுகாதாரப் பணிப்பாளர் வாகன விபத்தில் உயிரிழப்பு

### வவுனியா ஏ9 வீதியில் சம்பவம்




(வவுனியா)

வவுனியா, ஏ9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாததார சேவைகள் திணைக் களப் பணிப்பாளர் வைத்தியர் கு.அகிலேந்திரன் மரண மடைந்துள்ளார். 15

### ஒக்ரோபர் முதல் சனிக்கிழமை

# ஜனாதிபதித் தேர்தல்

## அமைச்சரவையில் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் வரும் சனிக்கிழமை ஜனாதி பதித் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச் சரவையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரவையில் ஜனாதிபதி அறி வித்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரி விக்கப்படுகின்றது. 15

## 4 மாணவர்கள் நீரில் மூழ்கிப் பலி

### ஆற்றில் நீராடச் சென்றபோது விபரீதம்

(குருநாகல்)

குருநாகல் அலவ்வ பிரதேசத்தில் உள்ள மா ஓயா ஆற்றில் நீராடச் சென்ற நான்கு மாணவர் கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 15

## பாரவூர்தி மோதியதில் ஒருவர் மரணம்

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் பாரவூர்தி மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சீனியன் இராசன் (வயது-65) என்பவரே 15

## 33 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பில் இருவேறு சந்தர்ப்பங்களில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 15

### ஜனாதிபதிக்கு மக்களாணை கிடையாது

## ரணில் - ராஜபக்ஷ இடையில் முறுகல் நிலை தீவிரமடைந்தது





(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ராஜபக்ச குடும்பத்திற்கும் இடையில் முறுகல் நிலை தீவிரம் அடைந்துள்ளது.

அரச நிறுவனங்களை தனியார் 15

## 23 ஏக்கர் காணி யாழில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட வறுத்தலைவிளான் பகுதியில் இராணு 15




நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற நைலோன் / கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

(C-0014)

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இல. 303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
076 315 6470


# வடக்கு மாகாண ஆளுநர் ஆஸி உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு



(யாழ்பாணம்)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல் ஸ்டீபன் (Paul Stephens) வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினை அவரது யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக வடக்கில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் இதன் போது இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், ஆளுநருக்கு தெளிவுபடுத்தினார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் காணப்படும் வளங்களை அடையாளப்படுத்தி புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவுஸ்திரேலிய வாழ் இலங்கை புலம் பெயர் உறவுகளுக்கு தெளிவுபடுத்துமாறும் உயர்ஸ்தானிகரிடம் ஆளுநர் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் தொழிற்துறையை மேம்படுத்துவதனூடாக வேலையின்மைப் பிரச்சினை தீர்க்கப்படுவதுடன், பொருளாதார நிலையிலும் முன்னேற்றத்தை காண முடியும் எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.(ம-7.10)


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (276)

074 17 37 684


கிளிநொச்சி - குஞ்சுப்பரந்தன் - பொறிக்கடவை

## திருவருள்மிகு கண்ணகி அம்மன் ஆலயம்

### பங்குனித் திங்கள் வேள்வி விழா - 2024

**எதிர்வரும் 01.04.2024 தொடக்கம் மறுநாள் அதிகாலை வரை பொங்கல் விழா நிகழ்வுகள்**

- அபிஷேகம், கொடியேற்றுதல்
- மகேஸ்வர பூசை (அன்னதானம்)
- பகல் காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி, பறவைக்காவடி, நேர்த்திகள்
- மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள்
- அம்பிகை வீதியுலா வருதல்
- பொங்கல், காவடி, தீமிதிப்பு
- அதிகாலை விசேட பூசையும் நீர்ச்சோறு வழங்கலும்

அடியார்கள் ஆண்கள் மேலங்கியுடன் பெண்கள் தலைவிரிக் கோலமாகவும் நேர்த்திக்கடன்களை மேற்கொள்வதைத் தவிர்த்துள்ளோம்.

- வணிக நிறுவனங்களுக்கான (கடை) ஏலம் 29.03.2024 காலை 11.00 மணிக்கு.
- தேநீர்ச்சாலைகள் அமைப்பதற்கு 2024ஆம் ஆண்டின் பிரதேச சபை அனுமதிப்பத்திரம் அவசியமானது.
- பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நன்றி

ஆலய அறங்காவலர் அவையினர்

(C-0019) *"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"*

# மரண அறிவித்தல்

## மகாலிங்கம் தவமணி



பெரியன்சீமா, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் தவமணி அவர்கள் 25.03.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா - ராமாசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மகாலிங்கம் (ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர் வலி. வடக்கு பிரதேச சபை) அவர்களின் அன்பு மனைவியும் சோபனாவின் அன்புத் தாயாரும் ஜீவனின் அன்பு மாமியாரும் அபியங்கா, யாதகி, ரிஷிகேஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தசாமி, குமாரசாமி, சொக்கலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடராஜா, தங்கமுத்து மற்றும் பாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2024) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் சூளானை சுன்னாகத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 028 0182 (C-0018) *தகவல் : குடும்பத்தினர்*

# சேவைநலன் பாராட்டு

## திரு. கிருஷ்ணபிள்ளை முரளிதாஸ்




சேவை விபரம்

- எழுதுநர் சேவை- மாகாண திட்டமிடல் செயலகம், திருகோணமலை 27.10.1993 - 2002
- NECORD 2003- 2009
- நகரசபை - பருத்தித்துறை 2009 - 2010
- மாகாண திட்டமிடல் செயலகம் 2011 - 2013
- மு.உ.சேவை - ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை 2013 (01 மாதம்)
- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை 2013 – 2019
- நகர சபை - வல்வெட்டித்துறை 2019 (01மாதம்)
- வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி 2019 – இற்றைவரை

வலயக் கல்வி அலுவலகம் வடமராட்சியில் உள்ளகக் கணக்காய்வாளராக பணியாற்றி சுய விருப்பின் பேரில் சேவையிலிருந்து 28.03.2024 ஆம் திகதி இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.கிருஷ்ணபிள்ளை முரளிதாஸ் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுக் காலத்தில் ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:-*

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி.

(C-0017)

# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய தொண்டர் சபை உறுப்பினர் **சு.பிரணவசுதன்** அவர்களின் அன்புத் தாயாரும் எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினருமான

## திருமதி தாரணி சுதாதரன்

அவர்கள் எமது ஆலய வளர்ச்சிக்கு ஆற்றிய பணி மகத்தானது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டும் என இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!


கண்ணகாம்பிகா சமேத
கண்ணகிலிங்கேஸ்வரர் ஆலயம்,
கண்ணகியம்மன் ஆலயம், ............... பரிபாலன சபையினரும்
வட்டுக்கோட்டை. தொண்டர் சபையினரும்

(C-0020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை விடுவிக்கக் கோரி

# கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்



(நெளுக்குளம்)

**முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்க கோரி நேற்று புதன்கிழமை கேப்பாய்பிலவு இராணுவ படை தலைமையத்திற்கு முன்பாக கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன் றினை முன்னெடுத்திருந்தனர்.**

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு இராணுவத் படை தலைமையகத்திற்கு இலங்கையின் இராணுவ தளபதி வருகை தந்திருந்தநிலையில் அவரிடம் தமது சொந்த காணிகளை விடுவித்து தருமாறு கோரி மகஜர் கையளிக்க குறித்த இராணுவ தலைமையகத்திற்கு முன்பாக ஒன்று கூடி கவனயீர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தார்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கும் கடந்த 11.03.2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்தனர்.

இதன்போது குறித்த கடிதத்தை தான் உரிய தரப்புக்களுக்கு அனுப்பி பத்து நாட்களில் ஒரு பதிலை பெற்று வழங்குவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை கேப்பாபிலவு மக்கள் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடிய போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியான முடிவு இதுவரை கிடைக்கவில்லை என மாவட்ட செயலாளர் தெரிவித்ததாக கேப்பாபிலவு மக்கள் தெரிவித்திருந்தனர். தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்திருந்த நிலையிலே நேற்று கேப்பாப்பிலவு இராணுவ படைதலைமையகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-299)




## தந்தைக்கு நீதி கோரி
## கெஹலியவின் மகள் முறைப்பாடு

(கொழும்பு)

தரமற்ற மருந்து கொள்வனவு விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் மகள் சமித்ரி ரம்புக்வெல்ல நேற்று புதன்கிழமை காலை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தனது தந்தையின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதால் உடனடியாக விசாரணை நடத்தி நீதி வழங்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.(நி-5-6)

## சுமார் 30 ஆயிரம் சிறுவர்கள்
## யாசகம் பெறுவதாக ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் யாசகம் பெறுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இந்நிலைமை எதிர்காலத்தையும் பாதிக்கலாம். இது தொடர்பில் கவனம் செலுத்தாவிட்டால் வீதியில் யாசகம் பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து போதைப்பொருள் விற்பனை, திருட்டு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்த சிறுவர்களில் சிலர் தங்களது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களினால் யாசகம் பெறுவதற்கும் பணம் சம்பாதிக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் தள்ளப்படுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளன. 4 முதல் 15 வயதுக்கு உட்பபட்ட பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் வீதிகளிலும் புனிதத் தலங்களிலும் சன நெரிசல் மிக்க இடங்களிலும் யாசகம் பெறுகின்றனர்.

சில பெற்றோர்கள் இந்த சிறுவர்களை கூலி வேலைகளுக்காகவும் வீதியோர வியாபாரங்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர். இந்த சிறுவர்களில் சிலர் போதைப்பொருள் பாவனைக்கும் பல்வேறு குற்றச்செயல்களுக்கும் அடிமையாகி இருப்பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சன்ரைசர்ஸின் 'அரசன்' கிளாசன்

## மீண்டும் வீழ்ந்தது மும்பை இந்தியன்ஸ்



ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஏமாற்றிய மும்பை அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணியிடம் தோல்வியடைந்தது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17வது சீசன் நடக்கிறது. ஹைதராபாத்தில் நடந்த லீக்போட்டியில்ஹைதராபாத், மும்பைப் அணிகள் மோதின.

ஹைதராபாத் அணிக்கு மயங்க் அகர்வால் (11) சோபிக்கவில்லை. மபகா வீசிய 3வது ஓவரில் வரிசையாக 2 சிக்சர், 2 பவுண்டரி அடித்த டிராவிஸ் ஹெட், ஹர்திக் பாண்ட்யா வீசிய 5வது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விளாசினார். ஹெட் 18 பந்தில் அரைச்சதம் கடந்தார்.

மறுமுனையில் அசத்திய அபிஷேகர் சர்மா, பியுஸ் சாவ்லா வீசிய 7வது ஓவரில் வரிசையாக 2 சிக்சர் பறக்கவிட்டார். இரண்டாவது விக்கெட்டுக்காக 68 ஓட்டங்கள் சேர்த்தபோது கோயட்சீ "வேகத்தில்" ஹெட் (62) வெளியேறினார்.

**கிளாசன் கலக்கல்**

அபாரமாக ஆடிய அபிஷேக், மபகா வீசிய 10வது ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் விளாச 16 பந்தில் அரைச்சதத்தை பதிவு செய்தார். இவர் 23 பந்தில் 63 ஓட்டங்கள் எடுத்த போது சாவ்லா "சுழலில்" சிக்கினார். பின் இணைந்த மார்க்ரம், கிளாசன் ஜோடி மிரட்டியது. மபகா வீசிய 17ஆவது ஓவரில் 2 பவுண்டரி அடித்த கிளாசன், கோயட்சீ பந்தை சிக்சருக்கு அனுப்பி 23 பந்தில் அரைச்சதம் எட்டினார். ஹைதராபாத் அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 277 ரன் குவித்தது. மார்க்ரம் (42), கிளாசன் (80) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**திலக் அசத்தல்**

கடின இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு இஷான் கிஷான் (34), ரோகித் சர்மா (26) ஜோடி சூப்பர் ஆரம்பம் வழங்கியது. நமன் திர் (30) நம்பிக்கை கொடுத்தார். சிக்ஸர் மழை பொழிந்த திலக் வர்மா 34 பந்தில் 64 ஓட்., (6 சிக்சர், 2 பவுண்டரி) விளாசினார். அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா (24) ஓரளவு கைகொடுத்தார். புவனேஷ்வர் குமார் வீசிய 17வது ஓவரில் அசத்திய ரிம் டேவிட் 2 சிக்சர், ஒரு பவுண்டரி அடிக்க 20 ஓட்., கிடைத்தன.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 47 ஓட்., தேவைப்பட்டன. மயங்க் மார்கண்டே பந்துவீசினார். ஷெப்பர்ட் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடிக்க 15 ஓட்டங்கள் மட்டும் கிடைத்தது. மும்பை அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 246 ஓட்., எடுத்து தோல்வியடைந்தது.

ரிம் டேவிட் (42), ஷெப்பர்ட் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இது, இந்த சீசனில் ஹைதராபாத் அணியின் முதல் வெற்றியானது. ஆட்ட நாயகன் விருதை அபிஷேக் சர்மா வென்றார். (ம-7,10)




## ரி20 உலகக்கிண்ணத் தொடர்

# பாக். அணித் தலைவராக பாபர் அசாம் நியமனம்



2024 ரி20 உலகக் கிண் ணத் தொடர் மே.தீவுகள் மற்றும் அமெரிக்காவில் நடைபெற உள்ளது.

இதுவரை 8 ரி20 உலகக் கிண்ணத் தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் இங்கிலாந்து (2010, 2022), மே.தீவுகள் (2012, 2016) தலா 2 முறையும், இந்தியா (2007), பாகிஸ்தான் (2009) இலங்கை (2014), அவுஸ்திரேலியா (2021) தலா ஒரு முறையும் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன.

9ஆவது ரி20 உலகக் கிண்ண தொடர் வருகிற ஜூன் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை நடைபெற இருக்கிறது.

இந்நிலையில் நடப்பு ரி20 உலகக் கிண்ணத் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் தலைவராக மீண்டும் பாபர் அசாம் தொடர்வார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த ஆண்டு நடந்து முடிந்த ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தாத நிலையில் பாபர் அசாம் 3 வடிவிலான தலைமைப் பதவியில் இருந்து விலகி இருந்தார்.

அவருக்கு பதிலாக ரி20, ஒருநாள் போட்டிக்கான அணித் தலைவராக சஹீன் அப்ரிடி நியமிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவரை நீக்கி மீண்டும் பாபர் அசாம் தொடர உள்ளார்.

இந்த தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடையேயான போட்டி ஜூன் 9ஆம் திகதி நியூயோர்க் நகரில் நடைபெற இருக்கிறது. (ம-7,10)

# பெர்த்தில் முதல் சவால்

## வெளியானது ஆஸி - இந்திய போட்டி அட்டவணை




இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் மோதும் டெஸ்ட் தொடர் பெர்த் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் 1996 முதல் "போர்டர்-கவாஸ்கர்" டெஸ்ட் தொடரில் மோதி வருகின்றன.

கடைசி நான்கு தொடரிலும் இந்தியா கிண்ணம் வென்றது. 2024-25 முதல் இத்தொடர் ஐந்து போட்டிகள் கொண்டதாக மாற்றப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்க இந்திய அணி, நவம்பர் மாதம் அவுஸ்திரேலியா செல்லவுள்ளது.

இதற்கான அட்டவணை நேற்று வெளியானது. வழக்கமாக அடிலெய்ட் மைதானத்தில் முதல் டெஸ்ட் தொடங்கும். இம்முறை பெர்த் மைதானத்தில் நவ.22-26ல் முதல் டெஸ்ட் ஆரம்பமாகிறது.

அடுத்து 9 நாள் இடைவெளிக்குப் பின் இரண்டாவது டெஸ்ட் பகலிரவு போட்டியாக, அடிலெய்டில் டிசம்பர் 6-10ல் நடக்கும். இதற்கு தயாராகும் வகையில் இந்திய அணியினர், பகலிரவு பயிற்சியில் ஈடுபட உள்ளனர்.

மூன்றாவது டெஸ்ட் பிரிஸ்பேனில் (டிச.14-18) நடக்க உள்ளது. நான்காவது டெஸ்ட் "பொக்சிங் டே" போட்டியாக டிசம்பர் 26-30ல் மெல்போர்ன் மைதானத்தில் நடக்கும். கடைசி, ஐந்தாவது டெஸ்ட் 2024, ஜன. 3-7இல் சிட்னியில் நடக்க உள்ளது.

**அட்டவணை**

நவ. 22-26 முதல் டெஸ்ட் - பெர்த்
டிச. 6-10 2வது டெஸ்ட் - அடிலெய்ட்
டிச. 14-18 3வது டெஸ்ட் -பிரிஸ்பேன்
டிச. 26-30 4வது டெஸ்ட் - மெல்போர்ன்
ஜன. 3-7 5வது டெஸ்ட் - சிட்னி. (ம-7,10)

# கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் 31 வது கடின பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் 29.03.2024 வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

மேற்படி போட்டியில் யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 28 கழகங்கள் பங்குபற்றுகின்றன. (ம-7,10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சீனா-இலங்கைக்கு இடையில் ஒன்பது ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஒன்பது புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தங்கள் இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் சீன பிரதமர் லீ கியாங் தலைமையில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

சீனாவின் தியானன்மென் சதுக்கத்தில் உள்ள மக்கள் மாவீரர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பிரதமர் இராணுவ மரியாதையை பெற்றுக்கொண்டதன் பின்னர் இருதரப்பு கலந்துரையாடல் இடம் பெற்றது.

மேலும், கைச்சாத்திடப்பட்ட ஒன்பது புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் ஊடாக இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் புதிய அத்தியாயம் ஆரம்பிக்கப்படும் என இரு நாட்டு பிரதமர்களும் உறுதிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)


# மூன்றாம் ஆண்டு நினைவுப்பிரார்த்தனையும் இசை அர்ச்சனையும்

கலைப்பிரவாகம், கலாபூஷணம், சங்கீதபூஷணம்

அமரர்.

## சுப்பையா கணபதிப்பிள்ளை



(ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப்பணிப்பாளர்-அழகியல்)

"லயஞான மணிரங்கன் கணபதிப்பிள்ளையின்
தயவினால் சங்கீதம் பூத்தது-நயமேவும்
பங்குனி பேறாகும் சதுர்த்தி நன்னாளில்
சங்கமித்தார் சிவன்தாள்"

முதுபெரும் இசைக்கலைஞர் அமரர் சுப்பையா கணபதிப்பிள்ளை அவர்களின் மூன்றாம் வருட நினைவுப் பிரார்த்தனை நாளில் இடம்பெறவுள்ள இசை அர்ச்சனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு கலைஞர்கள், இசை ஆர்வலர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

காலம்: 29.03.2024 வெள்ளி மு.ப 10மணி

இடம்: தொல்புரம் வழிக்கம்பரை அம்மன் திருமண மண்டபம்

(255)

நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: இசைக்கலைஞர்கள் மற்றும் குடும்பத்தினர்.


# இராசிபலன்

28.03.2024
பங்குனி 15, வியாழக்கிழமை
திருதியை பிற்பகல் 5.33 மணிவரை

சுவாதி பிற்பகல் 5.18 மணிவரை
சுபநேரம் 7.43-9.13 மணிவரை
இராகுகாலம் 1.43-3.13 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்திரட்டாதி

வளவன்

**மேஷம்** குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணமொன்று இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் வலிய வந்து உதவுவர், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** தேக நலனில் அக்கறை கூடும், கற்பனை மிகுதியான நாள், பயணங்கள் கைகூடும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**தனுசு** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்** ஆடம்பர பொருட்கள் மீது அதிக அக்கறை காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் வெற்றி தரும், எதிர்பாராத நேரத்தில் நண்பர்கள் உதவி கிடைக்கும்.

**கும்பம்** நேற்றைய பயணமொன்று இன்று தொடரலாம், உடல் நலன் சீராகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.


**மீனம்** எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும்.

இரும்பு இதயங்களைத் திறக்கும் திறவுகோல் அன்பு மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பகுதியில் ‘யுக்திய’ விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)



இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப் பட்டுவரும் "யுக்திய" நேற்று முன்தினம் கோப்பாய் பொலீஸ் பிரிவுக்குற்பட்ட பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. வெதகெதர மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி எச்.எம்.ஜீ ஹேரத் ஆகியோரின் நேரடி நெறிப்படுத்தலில் திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைப் பகுதிகளில் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், வாகனங்களில் "யுக்திய" விழிப்புணர்வு ஸ்டிக்கர்களும் பொலிஸாரால் ஒட்டப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி- 5-6-33)

# சண்டிலிப்பாயில் நடமாடும் சேவையும் சட்ட ஆலோசனை முகாமும்

(சாவகச்சேரி)



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையமானது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய இலவச நடமாடும் சேவை மற்றும் இலவச சட்ட ஆலோசனை முகாம் ஆகிய செயற்பாடுகள் நேற்று புதன்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் பணிப்பாளர் திருமதி அம்பிகா சிறிதரன், ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ,பதிவாளர் நாயகம் திணைக்கள பிரதிப் பதிவாளர் நாயகம்,சட்ட வல்லுனர்கள்,ஆட்பதிவுத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், இளவாலை மற்றும் மானிப்பாய் பொலிஸார், சமாதான நீதிவான்கள் கலந்து கொண்டு இலவச சேவையை வழங்கி பொது மக்களுடைய தேவைகளை நிறைவேற்றியிருந்தனர். மேற்படி நடமாடும் சேவையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குள் வதியும் பெருமளவான பொது மக்கள் கலந்து கொண்டு பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-30)

# துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் 31 ஆவது கடின பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி போட்டியில் யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 28 கழகங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும்-புதிய நிர்வாகசபைத் தெரிவும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பொதுக்கூட்டம் மற்றும் நிர்வாக சபைத் தெரிவில் அங்கத்தவர்களை கலந்து கொள்ளுமாறு மதுவன் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (நி-5-6-30)



இலங்கைக்கான எகிப்து தூதரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட Women Plus Bazaar 2024 கண்காட்சிக் கூடத்தை ஏனைய அதிதிகளுடன் இணைந்து வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார்.

# மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தினநிகழ்வு




(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகம் நடத்திய சர்வதேச மகளிர் தினம் மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு "அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" என்னும் தொனிப்பொருளில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) தி.ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மனிதவள முகாமைத்துவத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் சி.தேவரஞ்சினி, கௌரவ விருந்தினராக தடகள வீராங்கனை சிறி செயானந்தபவ அகிலத் திருநாயகி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

உள்ளூர் பெண் முயற்சியாளர்களின் விற்பனைக்கூடங்கள் விருந்தினர்களால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், இந் நிகழ்வில் மாவட்டத்திலுள்ள பெண்களை பிரதி நிதித்துவப் படுத்தும் வகையிலே விருந்தினர்கள் அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதோடு, சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள், சிறந்த பெண் சமூக மட்ட அமைப்புக்களும் கௌரவிக்கப்பட்டதுடன், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு மரக் கன்றுகள் [illegible] பிடத்தக்கது.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 160 | 130 | 150-170 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 | 200-250 | 250 |
| தக்காளி | 80 | 120 | 130 | 80-100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 100 | 100-140 | 200 |
| கோவா | 250 | 250 | 280 | 350 | 300 |
| கரட் | 300 | 400 | 350 | 300 | 400 |
| பூசணி | 200 | 180 | 330 | 100 | 160 |
| புடோல் | 150 | 150 | 120 | 80-100 | 120 |
| வாழைக்காய் | 130 | 180 | 120 | 100-130 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 180-320 | 250 |
| பெரிய வெங்காயம் | 550 | 580 | 460 | 380 | 600 |
| பாகற்காய் | 300 | 250 | 200 | 250-300 | 250 |
| வெண்டக்காய் | 250 | 200 | 100 | 100-150 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 130 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 250 | 200-300 | 300 |
| லீக்ஸ் | 300 | 300 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 250 | 200 | 250 | -- | 300 |
| கறிமிளகாய் | 300 | 200 | 200 | 350 | 300 |
| முருங்கைக்காய் | 1000 | 900 | 600 | 300-700 | 1000 |
| போஞ்சி | 350 | 250 | 200 | 190 | 250 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | -- | 200 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 40 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 200-270 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 50-110 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 140 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 200 | 50 | 100 | 80 |
| [illegible] | 160 | [illegible] | 120 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்திட்டங்கள் முழுமை பெறுவதற்கு அதிகாரிகள், பயனாளிகளின் ஒத்துழைப்பு அவசியம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்


(அக்கராயன்)

முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்கள் ஒவ்வொன்றினதும் முழுமையான வெற்றிக்கு அதி காரிகள் மட்டுமல்லாது பெற்றுக்கொள்ளும் பயனாளிகளும் அதிக கரிசனையும் அக்கறையும் செலுத்த வேண்டும்.

அவ்வாறான ஒரு நிலை உருவாக்கப்படும் போதுதான் வழங்கப்படும் அபிவிருத்திகள் ஒவ்வொன்றும் எதிர்பார்க்கும் முழுமையான இலக்கை அடையும் என கிளி. மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுவிக்கப்பட்ட காணிகள் தொடர்பில் பல்வேறுபட்ட செய்திகள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.



நீண்டகாலமாக இராணுவத்தினரது தேவைக்காக பயன்படுத்தப்பட்டுவந்த குறித்த காணிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் அக்காணிகளை உரியவர்கள் இன்னமும் முழுமையாக பொறுப்பெடுக்காத நிலை காணப்படுகின்றது. குறிப்பாக பற்றைகளால் சூழ்ந்துள்ள காணிகளை துப்புரவு செய்து காணிகளின் உரிமையாளர்கள் காணிகளை வரையறை செய்து எல்லையிட்டு பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள கால அவகாசம் தேவையாக உள்ளது.

இதனால் குறித்த காணிகளை உரித்தாளர்கள் இன்னமும் பொறுப்பெடுக்காத நிலை காணப்படுகின்றது. இதனால் குறித்த காணிகள் மோசடிகளுக்குள்ளாகும் நிலை உருவாகலாம்.

எனவே அக்காணிகளின் உரித்தாளர்கள் தமது காணிகளை உரிய வகையில் எல்லையிட்டு பொறுப்பெடுக்ககும்வரை பொலிஸாரும் இராணுவத்தினரும்அக்காணிகளுக்கு பாதுகாப்பினை வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் பணித்திருந்தார்.

(ந்-5-6-100-315-316-350)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புத்தூர் யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் நவரத்தினம் ஸ்ரீ முருகதாஸ் காந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ந்-5-6)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974

(252)



பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

இலங்கை காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு சொந்தமான LRDC பாதுகாப்பு நிறுவனத்திற்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்த ஆண், பெண் இருபாலருக்குமான வேலைவாய்ப்பு.

வயது 18 தொடக்கம் 50 வரை.

தொடர்புகளுக்கு:
071 559 0908
071 961 5772
077 433 1841

(269)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு : 1996 - இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: Bsc in(Computer) Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி தொழில் புரியும் பெண்<br>தொ.இ: B/14367 | பிறப்பு-1990- இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா:<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்:LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: படித்த பட்டதாரி<br>தொ.இ: G/14267 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா:<br>உயரம்:5' 10"<br>தகைமை/தொழில்- A/L . வர்த்தகம் கடை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் படித்த பெண்<br>தொ.இ: B/14368 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: -59<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: M.L.S<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம். Doctor, or Engineer<br>தொ.இ: G/14271 |
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்:அத்தம்<br>கி.பா: 39<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: Msc in Computer Science, Senior machine learning Engineer<br>எதிர்பார்ப்பு- Degree holder with job<br>தொ.இ: B/14371 | பிறப்பு -1996- இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: -<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: Bachelor Business Management in Hospitality, ACCA<br>எதிர்பார்ப்பு: Engineer or QS(Dubai)<br>தொ.இ: G/14273 |
| பிறப்பு: 1992- இந்து<br>நட்சத்திரம்:விசாகம்<br>கி.பா: 48<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: Bsc (Hons) Agriculture &PGDE, Teacher<br>எதிர்பார்ப்பு:அரச/தனியார் தொழில்<br>தொ.B/14373 | பிறப்பு -1997 -இந்து<br>நட்சத்திரம் -திருவோணம்<br>கி.பா: 40<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி . Software Enginer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Degree holder<br>தொ.இ: G/14274 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்



மணிவிழா வாழ்த்து

யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாசாலை அதிபர்

உயர்திரு கந்தசாமி ஸ்ரீதரன் அவர்களின் மணிவிழா



தலைவர்
சண்வாமதேவன்
(ஓய்வுநிலை அதிபர்)
இடம்:- திவ்விய மஹால்
K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 28.03.2024
வியாழக்கிழமை
மாலை 6 மணி

கந்தசாமி ஸ்ரீதரன்
கந்தசாமி - தந்தை
தங்கரத்தினம் - தாய்
பிறப்பிடம் -வரணி, கரம்பைக்குறிச்சி
ஆரம்பக்கல்வி - 1-8 வரணி மகா வித்தியாலயம் (வரணி மத்திய கல்லூரி)
இடைநிலைக்கல்வி- 9-12 கரவெட்டி திரு இருதயக் கல்லூரி.

ஆசிரிய நியமனம் – 1988.08.17

சேவை விபரம்
வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
யாழ்.மத்திய கல்லூரி
வேலணை மத்திய கல்லூரி
வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்

அதிபர் சேவை
யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ் கலவன் வித்தியாலயம்

Congratulations

மனைவி–கலைவாணி (வணிகவியல்)
பிள்ளைகள் –நித்தியாராணி –B.com– புனித பரியோவான் கல்லூரி–நிதி உதவியாளர்
நிரோஜிதன் – இலத்திரனியல் தொடர்பாடல் பொறியியலாளர்
மயூரி – கிழக்கு பல்கலைக்கழக பௌதீகவியல் –கணிதத்துறை இரண்டாம் வருட மாணவி

இன்றுபோல் என்றும் வாழ வாழ்த்துகிறோம்.


(162)

வாழ்த்துவோர்: SIVARUBINI MOTORS சிவரூபினி மோட்டோர்ஸ்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நகைச்சுவை நடிகர் சேசு மாரடைப்பால் மரணம்



(சென்னை)

தனியார் தொலைக்காட்சியில் லொள்ளு சபா நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான நடிகர் சேசு மாரடைப்பால் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டு காலமானார்.

தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான லொள்ளு சபா நிகழ்ச்சி மற்றும் திரைப் படங்களிலும் நகைச்சுவை கதாபாத்திரத்தில் இவர் நடித்துள்ளார்.

சமீபத்தில் வெளியான 'வடக்குபட்டி ராமசாமி' படத்தில் சேசுவின் கதாபாத்திரம் பெரிதும் பேசப்பட்டது.

இந்நிலையில், கடந்த மார்ச் 15ஆம் திகதி உடல் நலக் குறைவால் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சேசு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரது மரணம் திரையுலகில் பலரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (நி-5-6)

## மொஸ்கோ த

# மோசமான மு

# புடினைத் து

### உக்ரைன் கைதிகள் 4000 பேருக்கு மர

(மொஸ்கோ)

**மொஸ்கோ மீதான ஐ.எஸ் தாக்குதலை திசை தி சிறையிலிருக்கும் உக்ரைன் கைதிகள் 4,000 பே விளாடிமிர் புடின் மரண தண்டனை விதிக்கலாம் எ ஒருவர் எச்சரித்துள்ளார்.**

மொஸ்கோ தாக்குதலுக்கு உக்ரைன் தான் காரணம் என ரஷ்யா தரப்பில் வாதிட்டு வரும் நிலையிலேயே 4,000 கைதிகளின் உயிர் ஊசலில் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நெருக்கடியான நிலையை பயன்படுத்தி விளாடிமிர் புடின் மீண்டும் மரண தண்டனையை அமுலுக்கு கொண்டுவரலாம் என்றும், உக்ரைன் கைதிகளுக்கு எதிராக பயன்படுத்த வாய்ப்பிருப்பதாகவும் கவலை எழுந்துள்ளது.

இதனிடையே ரஷ்ய நிபுணர் ஒருவர் தெரிவிக்கையில், மொஸ்கோ தாக்குதலானது முழுமையான ஐ.எஸ் தாக்குதல் போன்று இல்லை என்றும், இது ரஷ்யாவுக்குள் திட்டமிடப்பட்ட தாக்குதலாகவே தென்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த வெள்ளிக்கிழமை

முன்னெ தாக்குத மோசமா லாம் எ

ரஷ்ய னையை உக்ரை மான ந

## பிஜி தீவில் நிலநடுக்கம்

(சுவா)

தென்பசிபிக் கடலில் உள்ள பிஜி தீவு அருகே சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தலை நகர் சுவா பகுதியில் நேற்று 6.4 ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுவாவில் இருந்து 591 கி.மீ. தென்மேற்கு பகுதியில் 10 மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கும் மையம் கொண்டதாக நில அதிர்வுக்கான தேசியமையம் தெரிவித்துள்ளது.

பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்ட போதிலும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. நிலநடுக்கத்தை உணர்ந்ததும் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (நி-5-6)

## புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதன்முறையாக டொனால்ட் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதன் முறையாக உலக பணக்கார பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

அதன்படி, புளூம்பெர்க் கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதல் 500 இடங்களுக்குள் ட்ரம்ப் இடம்பிடித்துள்ளார்.

பல்வேறு நிறுவனங்களை நடத்திவரும் பெரும் தொழில் அதிபரான டொனால்ட் ட்ரம்பின் சொத்து மதிப்பு 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

அதாவது இலங்கை மதிப்பில் 1,962,556,050,000 ரூபாய் ஆகும்.

அவரது நிறுவனங்களின் பங்கு 185 சதவீதம் விலை அதிகரித்ததால் அவரது சொத்து மதிப்பில் 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் உயரந்துள்ளது.

இதனையடுத்து அவர் உலக பணக்காரர்கள் பட்டியலில் 500 ஆவது இடத்தில் இடம் பிடித்துள்ளார்.

இதனிடையே, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சமூக ஊடகங்களுக்கு தடை விதித்த அமெரிக்கா



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் சமூக ஊடகங்களுக்கு தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான சட்டத்தில் மாநில ஆளுநர் கையெழுத்திட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, புளோரிடா மாநிலத்தில் 14 வயதுக்குற்பட்ட குழந்தைகள் சமூக வலைதளங்களில் கணக்கு வைத்திருப்பது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் 14 வயதுக்குற்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடக கணக்குகளை நீக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-5-6)

## உத 12

(காச

காசா வீசப்பட் விழுந்த முயன்ற உயிரிழ பட்டுள்ள

இஸ் வரும் தீ காசாவி லும் பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ா தாக்குதல்;

# ...முடிவெடுக்க

# ...தூண்டலாம்

## ...கு மரண தண்டனை விதிக்க வாய்ப்பு

## ...திசை திருப்பி ரஷ்ய ...000 பேர்களுக்கு ...கலாம் என நிபுணர்

ருவர் தாக்கு .எஸ் என் மிடப வதாக மை

முன்னெடுக்கப்பட்ட கொலை வெறித் தாக்குதல் ரஷ்ய ஜனாதிபதியை மோசமான முடிவெடுக்கவும் தூண்டலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.


ரஷ்யா மீண்டும் மரண தண்டனையை அமுலுக்கு கொண்டுவந்தால், உக்ரைன் மற்றுமொரு மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



தற்போது 4,000 உக்ரைன் கைதிகள் ரஷ்யாவில் சிறையில் உள்ளனர். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் பொருட்டும், மொஸ்கோ தாக்குதலை அனுமதித்திருக்கலாம் என நிபுணர் தரப்பில் சந்தேகம் எழுப்பப்படுகிறது. (நி-5-6)

## தற்கொலைப்படைத் தாக்குதலில் 5 சீனர்கள் உட்பட 6 பேர் பலி

### பாகிஸ்தானில் சம்பவம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் சீனாவைச் சேர்ந்த 5 பேர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன நாட்டினர் சென்ற வாகனத்தின் மீது தற்கொலை படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தானின் பல பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகளில் சீன நிறுவனங்கள் ஈடுபட்டுள்ள நிலையில் சீன பொறியாளர்கள் சென்ற வாகனத்தின் மீது ஆயுதக்குவியலுடன் வந்த தற்கொலைப்படை வெடிக்கச் செய்துள்ளார்.

இந்த நிலையில், இந்த தாக்குதலில் சீனாவைச் சேர்ந்த 5 பேர் பாகிஸ்தானை சேர்ந்த கார் சாரதி உட்பட மொத்தம் 6 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அணை கட்டுமானத்திற்காக வாகனத்தில் சென்ற சீனப் பொறியாளர்களைக் குறி வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5-6)

## ...கு ...கா



றில கழந் ளில் ட்படி குழந் ணக் நடவ தப்பட் 5-6)


## உதவிப் பொருட்களை எடுக்க முயன்ற 12 பேர் கடலில் மூழ்கிப் பலி

(காசா)

காசா மீது வான்வெளி ஊடாக வீசப்பட்ட உதவிப்பொருட்கள் கடலில் விழுந்த வேளை அவற்றை எடுக்க முயன்ற 12 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தீவிரத் தாக்குதல் காரணமாக காசாவில் வாழும் மக்கள் போரினாலும் பட்டினியாலும் உயிரிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த மக்களுக்கு உதவும் விதமாக 18 பொதிகளில் மனிதாபிமான உதவிகளை பரசூட் மூலம் வழங்க பென்டகன் முயற்சித்துள்ள நிலையில் குறித்த பரசூட் இயங்காததால் அவை கடலிற்குள் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)



## 40 வாகனங்கள் மோதி விபத்து இருவர் பலி, 31 பேர் படுகாயம்

### ஜேர்மனியில் சம்பவம்

(பெர்லின்)

ஜேர்மனியில் ஏற்பட்ட தொடர் விபத்துக்களில் இரண்டு பேர் உயிரிழந்ததோடு 31 பேர் படுகாயமடைந்துள்ளார்கள்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் ஜேர்மனியின் பவேரியா மாகாணத்தில் Nuremberg நோக்கிச் செல்லும் A3 நெடுஞ்சாலையில் நிகழ்ந்த விபத்துக்களில் 40 வாகனங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

கனமழை காரணமாக ஒரு இடத்தில் பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட பின்னால் வந்த கார்கள் அந்த இடத்தில் குவிய கடும் போக்குவரத்து நெரிசல் உருவாகியது.

விபத்தில் மூன்று வாகனங்கள் தீப்பற்றி எரிந்துள்ளதோடு, நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மீது பின்னால் வேகமாக வந்த கார்கள் மோதியதில் மொத்தமாக 40 வாகனங்கள் விபத்துக்குள்ளானமையால் நெடுஞ்சாலையே மூடப்பட்டது.



இந்த சம்பவங்களின் போது, இரண்டு பேர் உயிரிழந்ததோடு 31 பேர் காயமடைந்துள்ளார்கள். படுகாயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர்கள் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் இந்த விபத்துக்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித் மற்றும் அநுரவுக்கு வலுக்கும் ஆதரவு

### விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைக்க மொட்டு திட்டம்





(கொழும்பு)

மக்கள் மத்தியில் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் முன்னிலையில் உள்ளன. ஆகவே பொது ஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைத்துக் கொள்வது அத்தியாவசியமானது என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ அரசியல் ரீதியில் தோல்வி அடைந்து முழு நாட்டையும் பழிகொடுத்தார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போதைய அரசியல் நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியும், மக்கள் விடுதலை முன்னணியும் முன்னிலையில் உள்ளன.

மக்கள் விடுதலை முன்னணிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இருப்பினும் இந்த செல்வாக்கு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் அளவுக்கு உயர்வடையாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பலமாக இருந்தவர்கள் பல்வேறு காரணிகளினால் இன்று விலகிச் செயற்படுகிறார்கள்.

இவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக் கொள்ள வேண்டும் என கட்சியின் தலைவர் மஹிந்தராஜபக்ஷ, கட்சியின்தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ உட்பட கட்சியின் சகல உறுப்பினர்களிடமும் வலியுறுத்தியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.(நி-5-6)

## முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய அபிவிருத்திக் கூட்டம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் நடைபெறுகின்ற விவசாய நடவடிக்கைகள், விவசாய விரிவாக்கல் திட்டங்கள், கால்நடை வளர்ப்பு, சிறுபோக செய்கை, தானியப் பயிர்களின் அபிவிருத்தி, தென்னை மர வெள்ளை ஈ தாக்கத்தினை கட்டுப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் பெரும்போக கால விவசாய அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதே நேரம் தானிய பயிர் செய்கையினையும் உற்பத்தியினை கூட்டுதல் மற்றும் சிறந்த விதைகளை உருவாக்கி மீள பயிர்ச் செய்கையினை மேற்கொள்ள நவீன இயந்திரத்தினை கொள்வனவு செய்தல் தொடர்பிலும் விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் (நிர்வாகம்), மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.ஜெயகாந் (காணி), மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பரணீகரன், வடமாகாண பிராந்திய விவசாய பணிப்பாளர் திருமதி ச.ஜாமினி, பிரதேச செயலாளர்கள், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்ட விவசாயப் போதனாசிரியர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-350)


## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
### சிற்றூண்டிச்சாலை கேள்வி மனு கோரல்-2024

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி சிற்றூண்டிச்சாலை 2024 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஒருவருட காலத்திற்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கு பொருத்தமான பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல் வரவேற்கப்படுகின்றன. இடைநிலைப்பிரிவு உயர்தரப் பிரிவு ஆகிய இரண்டு பகுதிகளிலும் தலா ஒரு சிற்றுண்டிச்சாலை வீதம் இரண்டுசிற்றுண்டிச்சாலைகள் அமைந்துள்ளன. கேள்வி கோரலின் போது தனித்தனியே இரண்டு சிற்றுண்டிச்சாலைக்கும் வெவ்வேறாக கேள்வி மனு சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி மனுகோரலின் போது ஒரு விண்ணப்பப்படிவத்துக்கான மீளளிக்கப்படாத செலுத்து தொகை ரூ.500 (அரசவரி உட்பட) பாடசாலைக் கடமை நாட்களில் அலுவலகத்தில் 29.03.2024 தொடக்கம் மு.ப 9 மணி - பி.ப 2.00 மணிவரை உரிய கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று 10.04.2024 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி என்னும் முகவரிக்கு சேர்த்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சிற்றூண்டிச்சாலையை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் 2024 எனக் குறிப்பிடல் வேண்டும்.

**ஆரோக்கியமான உணவுக்கான உத்தரவாதத்துடன் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்வி கோரல் மனுக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**

தலைவர், பாடசாலை அபிவிருத்திக்குழு,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.


## இன்று ஒரு தகவல் 78



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# முதலைக் கண்ணீர்

ஒரு ஆள் இருந்தான்...

அவனுக்கு பல பேரிடம் பழக்கவழக்கம் அதிகம். திடீரென்று ஒரு நாள் அவன் செத்துப்போயிட்டான். எல்லோருக்கும் ரொம்ப கஷ்ரமாகப் போய்விட்டது. சொந்தக்காரர்கள் எல்லோரும் அழுதார்கள். சிநேகிதர்கள் எல்லோரும் அழுதார்கள். கொஞ்ச நாளிலே எல்லோரும் அந்தக் கவலையை மெல்ல மெல்ல மறந்து விட்டார்கள். ஒரு வருடம் ஆகிவிட்டது. அதற்குப் பிறகும் ஒரு ஆள் இவனை நினைத்து அழுதுகொண்டு இருந்தார். இவ்வளவுக்கும் அவர் சொந்தக்காரர் இல்லை. ரொம்பவும் நெருங்கிய சினேகிதர் போல இருக்கு.

அய்யோ இப்படி மோசம் செய்து விட்டு போட்டியளே! என்று ஒரு வருடமாக இவர் தினமும் அழுது கொண்டு இருந்தார். பக்கத்தில் இருந்தவர்கள் ஆறுதல்கள் சொன்னார்கள். கவலைப்படாதீங்க.... விதியை யாராலே மாற்ற முடியும்? மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள்.... என்றார்கள்.

அது எப்படி முடியும்? அந்த ஆளு என்னிடம் ஆயிரம் ரூபாய் கடன் வாங்கியிருந்தானே. அப்படியே மோசம் செய்துவிட்டு போய் விட்டானே. இனிமே யாரிடம் அதை வங்க முடியும்! என்று சொல்லி இவர் மறுபடியும் ஓ! என்று அழ ஆரம்பித்துட்டார்.

இந்த அழுகைக்கு காரணம் என்ன?பாசத்தினாலே வந்த அழுகை இல்லை இது! அழுகை வித்தியாசப்படுகிற மாதிரி கண்ணீரும் வித்தியாசப்படும்.!ஆனந்தக் கண்ணீர் இருக்கிறது! அழுகைக் கண்ணீர் இருக்கிறது! அது போல முதலைக் கண்ணீர் இருக்கிறது!

பொய்யான அழுகை அழுகிறவனை முதலைக் கண்ணீர் வடிக்கிறான் என்று சொல்வார்கள்.முதலை ஏன் கண்ணீர் வடிக்கிறது தெரியுமா? அதுதான் இன்றைக்கு தகவல்.

கடற் தண்ணீர் உப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் தான். ஒரு லீற்றர் கடல் நீரிலே சுமார் 35 கிராம் உப்பு கரைந்து இருக்கிறது. மெட்ராஸ்காரர் என்ற ஒருவர் வேறே வழியில்லாமல் கடற் தண்ணீரையே குடித்து இருக்கிறார் என்று சொல்லுங்கள் என்ன நடக்கும்?

கடல் வற்றிப் போய்விடுமா? அது ஒன்றும் ஆகாது!

இவருடைய உடம்பு வீணாகப் போய்விடும்.

கணிசமான அளவிற்கு சோடியம் பொட்டாஷியம் கல்சியம் இது மாதிரியான உப்புகள் அவர் உடம்பிற்குள்ளே போய்விடும். உள்ளே போய் சும்மாவா இருக்கும்? இரத்தத்திலே கலக்கும்! கடைசியில் ரொம்பவும் ஆபத்திலே போய் முடியும்.

நமது நிலைமை அப்படி! கடலிலே இருக்கின்ற முதலையின் நிலைமை எப்படி தெரியுமா?முதலை மட்டுமில்லை... கடல்களிலேயே வாழ்கிற உயிரினங்கள் நிறைய இருக்கிறது.

அவை எல்லாம் உணவு சாப்பிடும் போது உணவோடு சேர்ந்து நிறைய கடல்தண்ணீரும் உள்ளே போகிறது. அதனாலேயே கடல் தண்ணீரிலே கரைந்து உப்புக்களும் நிறைய உள்ளே போய்விடும்.

இந்த உப்புக்களை எப்படி மறுபடியும் வெளியேற்றுவது?

அதிகப்படியான உப்பை வடிகட்டுவதற்கு அதனிடம் ஒரு வசதி இருக்கிறது! இதற்காக அதன் உடம்பிலே ஒரு உறுப்பு இருக்கின்றது!.

அதற்குப் பெயர் சால்ட் கிளாண்டு முதலைக்கு இந்த சால்ட் கிளாண்டுவின் துவாரம் எங்கேயிருக்கும் தெரியுமா?

அதோட கண் ஓரத்திலே இருக்கு! அதன்வழியாக அதிகப் படியான உப்பு வெளியே வந்துவிடும்!

இது ஒரு திரவமாக வெளியே வருகிறது!பார்ப்பதற்கு இது கண்ணீர் மாதிரி இருக்கும்!ஆனால் அதிலே இருப்பது முழுவதும் உப்பு!

இந்த முதலைக் கண்ணீரை கொஞ்சம் எடுத்து அதிலே எவ்வளவு உப்பு இருக்கிறது என்று சோதனை செய்து பார்த்தார்கள்!முதலைக் கண்ணீரிலே உள்ள சோடியம் உப்பு கடல் தண்ணீரிலே இருக்கிறதை விட இரண்டு மூன்று மடங்கு அதிகமாக இருக்கும்.

முதலை இரத்தத்திலே இருக்கின்ற உப்பை விட முதலைக் கண்ணீரிலே இருக்கின்ற உப்பு ஐந்து மடங்கு அதிகமாக இருக்கும்.

அதனாலே முதலை அழுவது எதுக்கு என்றால் அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்காக!அது கவலையினாலே அழவில்லை. சிலபேர் அதைப்பார்த்து விட்டு என்ன சொல்லுவார்கள் தெரியுமா? முதலை பிராத்தனை செய்கிறது.

மனம் கசிந்து கண்ணீரை வெளியே விடுகிறது என்று சொல்வார்கள். அப்படி சொல்வது தப்பு! அதனாலே தான் பொய்யான அழுகை அழுவது முதலைக் கண்ணீர் வடிக்கிறது என்று சொல்வார்கள். ஜப்பானில் ஒரு கதை உண்டு. ஒரு மாமியார் இறந்து போனானார். மருமகள் அழுது கொண்டு இருக்கிறார்! துக்கம் தாங்க முடியாமல் தேம்பித் தேம்பி அழுதார்! பக்கத்து வீட்டுக்காரர் பார்க்கிறார்கள்! ஐயோ பாவம் என்று நினைத்தார்கள் மாமியார் போனதிலே உனக்கு இவ்வளவு வருத்தமா அம்மா? என்று கேட்டார்கள்! அதற்கு அந்த பெண் அவங்க செத்துப் போனதை நினைத்து அழவில்லை. மறுபடியும் பொழைத்திவந்துவிடுவார்களோ! என்று நினைத்து அழுகிறேன்! என்றது.இந்தக் கண்ணீரை எந்த ரகத்திலே சேர்க்கிறது?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புளியம் பொக்கணை பாலத்தின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்துங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் முல்லைதீவு ஏ-35 வீதியின் புளியம் பொக்கணை பகுதியில் உள்ள பாலத்தின் கட்டுமானப் பணிகள் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இடை நடுவில் கைவிடப்பட்டதால் அவ்வீதியால் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் அசௌ கரியங்களுக்கு உள்ளாவதுடன் விபத்துகளும் ஏற்படும் அபாய நிலை காணப்படுகின்றது.

பரந்தன் முல்லைதீவு ஏ 35 வீதியின் புளியம்பொக்கணை பத்தாம் கட்டை பகுதியில் உள்ள பாலத்தின் புனரமைப்பு பணிகள் கடந்த 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே ஆரம்பிக்கப்பட்டு அதன் பணிகள் இடை நடுவில் விடப்பட்டுள்ளன.

இவ்வாறு குறித்த பாலத்தின் கட்டுமானப் பணிகளை விரைவாக முன்னெடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்ற போதும் அதன் புனரமைப்பு பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படாது காணப்படுகின்றன.

இப்பாலத்தின் கட்டுமான பணிகள் விரைவுபடுத்தப் படாத நிலையில் பெரும் ஆபத்துக்களுக்கு மத்தியில் வாகனங்கள் பயணிக்கும் நிலை காணப்படுவதோடு, இப்பாலத்துக்கு பதிலாக அமைக்கப்பட்டுள்ள மாற்று வழி பாலமும் அடிக்கடி சேதமடைந்து வருகின்றது எனவே குறித்த பாலத்தினை புனரமைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-6-315)

# மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் அதிபர் கந்தசாமி ஶ்ரீதரனின் மணிவிழா இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்.காங்கேசன்துறைவீதி, திவ்வியமஹால் மண்டபத்தில் ஓய்வு நிலை அதிபர் சண் வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-5)

# அரசியல் கைதி அரவிந்தன் சி.ஐ.டியினரால் கைது

(குருமன்காடு)

முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரி சங்க தலைவருமான செ.அரவிந்தன் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல், ஆலடி வீதியில் வசிக்கும் முன்னாள் அரசியல் கைதியான செ.அரவிந்தன் கடந்த வாரம் முகப்புத்தக பதிவு தொடர்பில் கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவிற்கு அழைக்கப்பட்ட போதிலும் அவர் செல்லாத நிலையில் மீண்டும் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், கொழும்பில் உள்ள பயங்கரவாத புலனாய்வு பிரிவுக்கு சென்ற சமயமே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை கொழும்பு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5-6-250)

# சமூக ஆளுகைத்தளம் நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(சாவகச்சேரி)

சமூக ஆளுகைத்தளம் நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேசசபை மண்டபத்தில் சமூக ஆளுகைத்தளத்தின் தலைவி திருமதி புனித பிரசித்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் பிரதிச் செயலாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மாவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் ம.கிருபாசுதன் மற்றும் பெண்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் திருமதி நளினி ரட்ணராஜாவும் கௌரவ விருந்தினர்களாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் செயலாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் திருமதி தர்ஷினி தயானந்தன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளார். (நி -5-6-30)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3073


### யுஸ்ரினா

பகல் முழுவதும் வெயிலில் சுத்திட்டு வீட்டுக்கு வந்து கண்ணாடிய பாத்தா முகம் இப்படித்தான் இருக்கும்.



### தீனா

எனக்கு வசதி வந்தா ஏழைகளுக்க உதவி செய்வேன் என்னு சாமிகிட்ட வேண்றுவங்க...



ஏன் அந்த ஏழைக்களே வசதிய வரனும்னு கேக்க மாட்டேங்கிறாங்க?

### கவின்


திங்க கிழமை அதுமா ஆபீஸ்க்கு வந்து வேல செய்யுறத விட..



ஆபீஸ்க்கு கிளம்பி வரதே ரொம்ப பெரிய வேலையா இருக்குடா சாமி..

### தக்ஷிகா

முட்டையை அதோட அம்மா பொரிச்சா குஞ்சு..



எங்கம்மா பொறிச்சா ஆம்லேட்...

### நிறோஸ்

பணிந்து போவதால் என்னை கோழை என்று எண்ணிவிடாதே...



என் பலத்தை காண்பிக்க நீ தகுதியானவன் இல்லை என்று தான் அர்த்தம்...

### மயூ

நிழலில் அருமை வெயிலில் தெரியும்...



ஆசிரியர்களின் அருமை கோடை விடுமுறையில் தெரியும்... (பெற்றோர்களுக்கு..)

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 440



அதே சமயத்தில் பூங்குழலி அத்தாமரைக் குளத்தின் இன்னொரு கரையில் தன்னந்தனியாக உட்கார்ந்து சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எதிர்பார்த்தபடி அவளுக்கு இந்தப் பிரயாணம் உற்சாகம் தருவதாக இல்லை. பிரயாணத்தின்போது இளவரசருடன் தனித்திருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமென்று நினைத்தாள். அவர் தன்னுடனே அளவளாவிப் பேசுவார் என்று எண்ணினாள். தன் மனத்தில் பொங்கும் உணர்ச்சியில் ஒரு சிறிதேனும் வெளியிடலாம் என்று ஆசைப்பட்டாள். அதற்கெல்லாம் சமயமேகிட்டாது போலிருக்கிறது. இளவரசரைச் சுற்றி ஒரே கூட்டமாகவே இருக்கிறது.

'அவரை எதிரிகளிடம் கொண்டுபோய் ஒப்புவித்த பழி ஒன்றுதான் மிஞ்சும் போலும். அந்தப் பழி தனக்கு எதற்காக ஏற்படவேண்டும்? ஏன் இங்கிருந்தபடி ஒருவருக்கும் தெரியாமல் ஓடி விடக் கூடாது? சேனாதிபதியின் கோபத்திலிருந்தாவது தப்பியதாக ஆகும்!'

'சே! சேனாதிபதி கோபம் என்னை என்ன செய்துவிடும்? யாருடைய கோபந்தான் என்ன செய்துவிடும்? அதற்கெல்லாம் நான் பயப்படவில்லை. ஆனால் என்னுடைய எண்ணமெல்லாம் ஏன் மண்ணோடு மண்ணாக வேண்டும்? இந்த நெஞ்சில் உள்ள தீ எத்தனை நாள் இப்படி என்னைத் தகித்துக்கொண்டிருக்கும்? இந்த உடம்பில் உயிர் எதற்காக இருக்கிறது? திடீரென்று ஒரு இடி விழுந்து என்னைக் கொன்று விடக்கூடாதா? இப்படி எத்தனையோ ஆயிரம் தடவை ஆசைப்பட்டாகி விட்டது பயன் ஒன்றுமில்லை. இந்த உயிர் தானாகப் போகப் போவதில்லை. நானாக ஏதேனும் செய்து கொண்டால் தான் இந்த உயிர் போகும்!'

'ஆ! இது என்ன? கனவு காண்கிறேனா? இல்லை, கனவு இல்லை! அங்கே அந்தப் பாழும் மண்டபத்துக்குப் பக்கத்தில் இளவரசருடைய சிநேகிதர் என்னிடமிருந்து பிடுங்கி எறிந்த கத்தி இதோ வந்து என்னருகில் விழுந்திருக்கிறதே? இதை யார் எறிந்திருப்பார்கள்? யாரோ இவருடைய பகைவர்தான் எறிந்திருப்பார்கள்! என்னைக் கொல்லுவதற்குத்தான் எறிந்திருப்பார்கள். என்ன துரதிஷ்டம்! என் மேலே விழாமல் சற்று நகர்ந்து விழுந்து விட்டதே? இதுவும் நல்லதற்காகத்தான். கையில் இந்தக் கத்தி இருக்கட்டும். அவருக்கு நான் கொடுத்த வாக்கை நிறைவேற்றிய பிறகு அவரை அந்தப் பாதகர்களிடம் கொண்டு போய் ஒப்புவித்த பிறகு அவர் எதிரிலேயே இந்தக் கத்தியினால் குத்திக் கொண்டு இறந்து விடுகிறேன். சீச்சீ! எதற்காக அவர் மனத்தை அப்படிப் புண்படுத்த வேண்டும்? அவர் கப்பலில் ஏறிப் போன பிறகு படகில் ஏறி நடுக்கடலில் சென்று அங்கே குத்திக்கொண்டு சாகலாம். என் அருமைக் கத்தியே நீ திரும்பி வந்தாயல்லவா? உன்னை அனுப்பியவர்களுக்கு வந்தனம்.


'ஒருவேளை இளவரசர் மேலே எறிய எண்ணி இதை எறிந்திருப்பார்களோ? ஆம் அவருக்கு வழியில் எத்தனையோ அபாயங்கள் நேரலாம் என்று சேனாதிபதி கூடச் சொன்னாரே? அப்படி ஒரு சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கக் கூடாதா? அவர் பேரில் குறிபார்த்து எறிந்த கத்தி என் நெஞ்சில் விழக்கூடாதா? அப்படி விழுந்து அவருக்காக நான் உயிர் துறக்கும் படி நேரக் கூடாதா அவ்விதம் நேர்ந்தால் நான் இரத்தம் பெருக்கி உயிர் துறக்கும் சமயத்தில் பூங்குழலியின் மனதில் ஒரு விசித்திரமான தோற்றம் ஏற்பட்டது. அவளுடைய மார்பில் கத்தி பாய்ந்திருந்தது.

"பிரயாணத்தைத் தாமதப் படுத்துவதினால் சேனாதிபதி என்ன பலனை எதிர்ப் பார்க்கிறார்?"

"அது எனக்கும் தெரியவில்லை சீக்கிரத்தில் தெரிந்து தானே ஆகவேண்டும்? இளவரசருடைய முகத்தைப் பார்! அவருக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை யென்று தெரிகிறதல்லவா?"


வந்தியத்தேவன் இளவரசரின் முகத்தைப் பார்த்தான். ஆத்திரமான வார்த்தைகளைப் பேசும் போது கூட மலர்ந்து விளங்கிய அவருடைய முகத்தில் இப்போது எள்ளும் கொள்ளும் வெடித்தன. புருவங்கள் நெறிந்திருந்தன. கண்கள் ஆழ்ந்த சிந்தனையைக் காட்டின.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வீரச் செயல்



என்ன நடக்கப்போகிறதோ என்று ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிந்தனர். ஒன்று இரண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான் மந்திரி. அவன் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடின... தான் தேடியவன் வந்திருப்பதை அறிந்து தொடர்ந்து எண்ணத் தொடங்கினான். அவன் ஒன்பது என்று எண்ணினான்.

கூட்டத்திலிருந்து ஒரு குரல் "எண்ணுவதை நிறுத்தி விட்டுக் கீழே வாருங்கள்" என்று கேட்டது.

யார் குரல் கொடுத்தது என்று எல்லாரும் பார்த்தனர்.

அங்கே மந்திரியின் மகன் கையில் ஒரு பாத்திரத்துடன் நின்றிருந்தான்.

உரத்த குரலில் அவன் "தந்தையே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான பணியாரம் அம்மா ஆசையாக உங்களுக்காகச் செய்தது. கீழே இறங்கி வந்து இதைச் சாப்பிடுங்கள். பிறகு குதியுங்கள் மீண்டும் இதைச் சாப்பிடுவீர்களோ இல்லையோ... யார் கண்டது!" என்றான்.

"எனக்கு மிகவும் பிடித்த பணியாரத்தை என் மகன் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் அனுமதி தந்தால் அதைச் சாப்பிட்டு விட்டுப் பிறகு குதிக்கிறேன். நீங்கள் அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான். எல்லாரும் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்தனர்.

"பணியாரத்தைச் சாப்பிட்டு விட்டுக் கீழே குதி" என்று அவர்களில் ஒருவர் குரல் கொடுத்தார்.

கீழே இறங்கி வந்தான் மந்திரி. தன் மகனின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கினான். அதிலிருந்த பணியாரத்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். அப்படியே மயங்கி விழுந்தான்.

இதைப் பார்த்த கூட்டத்திலிருந்த சிலர் "அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டான்" என்றனர்.

மற்றும் சிலர் "உயிர் தப்புவதற்காக மயக்கம் வந்தது போல நடிக்கிறான்" என்றனர். அரண்மனை மருத்துவர் அங்கு வந்தார்.

மந்திரியை சோதித்த அவர் "உண்மையிலேயே மயக்கமாகி விட்டான். மயக்கம் தெளிய ஏழெட்டு மணி நேரம் ஆகும்" என்றார். மந்திரியை அவர் வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர்.

"ஐயோ! இப்படியாகி விட்டதே!" என்று பேசிக் கொண்டே கூட்டத்தினர் கலைந்து சென்றனர். மறுநாள் அரசரைச் சந்தித்தான் மந்திரி.

"நீங்கள் சொன்னது போல வீரச் செயல் செய்வதாக பெரிய கூட்டத்தைக் கூட்டினேன். அவர்கள் எதிரிலேயே அந்தச் செயலைச் செய்யாமல் வந்து விட்டேன். எப்படி என் திறமை?" என்று கேட்டான்.

"அப்போது உன் மகன் பணியாரங்களுடன் வரவில்லையானால் உன் நிலை என்னவாகி இருக்கும்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! அந்தப் பணியாரங்களுக்குள் மயக்க மருந்து கலந்து எடுத்து வரச் சொன்னதே நான் தான். எல்லாம் என் திட்டப்படி நடந்தது" என்றான் மந்திரி

"அறிவுக்கூர்மை உள்ளவர்களை யாராலும் வெற்றி பெற முடியாது என்பதை உன் மூலம் புரிந்து கொண்டேன்" என்று அவனைப் பாராட்டினார் அரசர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைச் செய்தாலும் தெளிவு, அறிவு மற்றும் அன்போடு செய்ய வேண்டும்.

~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆங்கில மருத்துவம் தவிர்ந்த ஏனையவை திட்டமிட்டு அழிக்கப்படுகிறதா?

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவர்கள் சிலர் இதர மருத்துவ சிகிச்சை முறைகள் இயங்காத வகையில் அறிக்கை செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டுப் பரவலாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அதாவது சித்த மருத்துவம், ஆயுர்வேதம், அக்குபஞ்சர் போன்ற மருத்துவ சிகிச்சைகள் செல்லுபடியற்றவை என்பது போலவும் அத்தகு சிகிச்சை முறைகளை முற்றுமுழுதாக இல்லாமல் செய்து ஆங்கில மருத்துவத்தை மட்டும் பாதுகாத்து, அதன்மூலம் மருத்துவ வியாபாரத்தைச் செய்ய முற்படுவதாகவும் இந்தக் குற்றச்சாட்டு அமைகிறது.

தவறான அக்குபஞ்சர் சிகிச்சை முறையால் யாழ்ப்பாணத்தில் ஒருவர் உயிரிழப்பு என்பதான செய்தி நேற்றைய (27) வலம்புரியில் வெளியாகியிருந்தது.

இச்செய்தியையடுத்து, அது தொடர்பில் நேற்றைய தினம் பலரும் வலம்புரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். இதில் கற்றறிந்தவர்களும் அடங்குவர்.

அவர்களின் கருத்துப்படி எங்கள் வட மாகாணத்தில் இன்னும் சில வருடங்களில் சித்த மருத்துவமும் ஆயுர்வேதமும் அக்குபஞ்சர் சிகிச்சை முறையும் இல்லாமல் செய்யப்பட்டு விடும்.

இதுவிடயத்தில் சில மருத்துவர்கள் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அக்குபஞ்சர் சிகிச்சை பெற்ற ஒருவர் தவறான சிகிச்சை முறையால் கிருமித் தொற்றுக்கு ஆளாகி, உயிரிழந்ததாக யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையானது அக்குபஞ்சர் சிகிச்சை முறையைப் பிழை போலவும் அந்த சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளக்கூடாது என்பது போலவும் அமையப் பெற்றுள்ளது.

இவ்வாறு அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் ஏற்பட்ட கிருமித்தொற்றினால் உயிரிழப்பு சம்பவித்ததாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள நிலையில்,

நாம் கேட்பதெல்லாம் யாழ்ப்பாண போதனா .வைத்தியசாலையில் மருத்துவர்களின் கவனக்குறைவால் – தவறான சிகிச்சையால் உயிரிழந்தவர்கள் இல்லையா?

அந்த விடயம் மரணமானவர்களின் மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா? அந்த உயிரிழப்புகள் பகிரங்கப்படுத்தப்பட்டதா?

யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவர்கள் உரியவாறு கவனிக்காததால், உயிரிழந்தவர்கள் பற்றிய விபரங்களை பத்திரிகையில் பிரசுரிக்காதது ஏன்? என்றெல்லாம் அவர்கள் கேள்வி எழுப்பினர்.

தவிர, ஏழைகளும் முதியவர்களும் தங்களின் நோய்க்கு சித்த மருத்துவத்தையே நம்பியுள்ளனர். அதுபோல அக்குபஞ்சர் சிகிச்சையில் சுகம் பெற்றவர்கள் பலர்.

உலகம் முழுவதும் அக்குபஞ்சர் சிகிச்சை அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கையில், இங்கு மட்டும் எதற்காக இப்படிச் செய்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் கருத்துரைத்தனர்.

இதுவிடயத்தில் அவர்களின் கருத்துக்கள் இங்கு பதிவிடப்படுகின்றது.

எம்மைப் பொறுத்தவரை மரணத்துக்கான உண்மையான காரணத்தை வெளிப்படுத்துவது கட்டாயமானது. இதில் மறைப்புகள், இருட்டடிப்புகள் செய்யப்படும் போது நீங்கள் மட்டும் சரியா? என்ற கேள்வி எழவே செய்யும்.

இதைத் தடுப்பதாயின், எப்போதும் உண்மையை அறிக்கையிடுவதே ஒரே வழி.

# வட மாகாணத்திற்கு 50 ஆயிரம் சூரிய மின் உற்பத்தியுடனான வீட்டுத்திட்டம்

## அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திற்கு தலா 50 இலட்சம் ரூபா பெறுமதியான 50 ஆயிரம் சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத் திட்டம் ஜனாதிபதியின் இணக்கத்தோடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் முன்னர் வழங்கவென தீர்மானிக்கப்பட்ட 25 ஆயிரம் வீட்டுத்திட்டத்திற்கு பதிலாக 50 ஆயிரம் வீடுகள் வழங்கவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஏற்கனவே வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு, அது நிறைவு செய்யப்படாதவர்களும், மீள்குடியேற்றத்தின் பின்னர் காணி இல்லாமல் போனவர்களும், சொந்தக்காணி இருந்தும் இதுவரை வீட்டுத்திட்டம் கிடைக்காதவர்கள் மற்றும் வீட்டுத் திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு வேறு ஏதேனும் வழியில் தகைமையுடையவர்களும் இந்த விசேட திட்டத்திற்குள் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-5-6-33)

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## உறுதியளித்தார் சீனப் பிரதமர்

(கொழும்பு)

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்றும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவும் என்றும் சீன பிரதமர் லீ கியாங் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்தார்.

நேற்று முன்தினம் பெய்ஜிங்கில் நடைபெற்ற உயர்மட்ட இருதரப்பு பேச்சுவார்த்தையின் போது, பொருளாதார பின்னடைவின் பின்னர் இலங்கை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தை சீனப் பிரதமர் பாராட்டினார்.'ஒரே சீனா' கொள்கையை இலங்கை தொடர்ந்து பின்பற்றி வருவதாகவும் சர்வதேச மன்றங்களில் சீனாவுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரம் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு தமது நாடு ஆதரவளிக்கும் என பிரதமர் லீ கியாங் தெரிவித்தார். இலங்கையின் சுதந்திரம், பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறைமை ஆகியவற்றிற்காக சீனா முன் நிற்பதற்கும், சர்வதேச அரசியல் பிரச்சினைகள் அல்லது பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது இலங்கைக்கு ஆதரவளித்தமைக்காகவும் பிரதமர் தினேஷ் குணவர்தன சீனாவுக்கு நன்றி தெரிவித்தார்.

இருதரப்பு பேச்சு வார்த்தையில் சீன மக்கள் குடியரசின் அமைச்சர்கள், இலங்கை இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, அசோக பிரியந்த, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.(நி-5-6)

# இலங்கையில் முதலீடு செய்ய முன்வரும் உலக நாடுகள்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் முதலீடு செய்ய பல்வேறு உலக நாடுகள் முன்வந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் கடந்த காலத்தில் பணவீக்கம் நூற்றுக்கு 70 சதவீதமாக அதிகரித்து காணப்பட்டது. அதனை நிவர்த்தி செய்வதற்கு மத்திய வங்கியிடம் காணப்பட்ட மாற்றுவழிவங்கிவட்டியை அதிகரிப்பது மாத் திர மே.

அதனை செயற்படுத்தியதன் ஊடாகவே இன்று பணவீக்கத்தை எம்மால் விரைவாக கட்டுப்படுத்த முடிந்தது.

இன்று நாட்டின் பணவீக்கம் நூற்றுக்கு 5 வீதமாக காணப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டனர். அரசாங்கத்தின் பொருளாதார முகாமைத்துவம் காரணமாக இன்று நாடு கட்டம் கட்டமாக மீண்டு வருகின்றது.

பல முதலீட்டாளர்கள் இன்று நாட்டில் முதலீடு செய்ய முன்வந்துள்ளனர். அத்துடன், இன்று வட்டி வீதங்கள் குறைப்பதற்கான சுற்றறிக்கையை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. அனைத்து துறைகளும் பொறுப்புடன் சரியாக இயங்கும் பட்சத்தில் விரைவாக மூலதன சந்தையை வழமைக்கு கொண்டுவர முடியும் இவ்வாறு ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி-5-6)

# விசா வழங்கும் பணியை தனியாரிடம் ஒப்படைக்க திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் முறையிலிருந்து விலகி தனியார் நிறுவனம் ஒன்றுக்கு அந்தப் பணிகளை ஒப்படைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் முறையினால் அதன் முழு வருமானமும் நேரடியாக குடிவரவு திணைக்களத்துக்குக் கிடைத்துள்ள தாகவும், இந்தப் பணியை ஒப்படைப்பதன்மூலம்பெரும் வருமானத்தை இழக்கும் அபாயம் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (நி-5-6)

# சிறுவர் பாராளுமன்றம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் அனுசரணையுடன் சிறுவர் பாராளுமன்ற நிகழ்வு இன்று வியாழக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (நி-5-6)

# 'ஐயோ சாமி...' பாடலுக்கு கிடைத்த சர்வதேச அங்கீகாரம்

(கொழும்பு)

சென்னையில் நடைபெற்ற 16ஆவது எடிசன் விருதுகள் விழாவில் 'ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்' என்ற பாடலுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பொத்துவில் அஸ்மினின் வரிகளில் சனுக விக்கிரமசிங்க மூலம் இயக்கப்பட்டு விண்டி குணதிலக பாடிய 'ஐயோ சாமி நீ எனக்கு' என்ற பாடல் 2023 ஆம் ஆண்டுக்கான உணர்வு பூர்வமான, பாடல் விருதைப் பெற்று ள்ளது.

தமிழ்நாடு சென்னையில் நடைபெற்ற 16 ஆவது எடிசன் விருது வழங்கும் விழாவில் 2023 ஆம் ஆண்டின் சிறந்த உணர்வுப் பூர்வமான பாடலுக்கான விருது ஐயோ சாமி என்ற பாடலைப் பாடிய விண்டி குணதிலகவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# தெற்காசியாவில் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலை திறப்பு

(கொழும்பு)

தெற்காசிய பிராந்தியத்தில் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலையான காலி - கராப்பிட்டிய வைத்தியசாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை-ஜேர்மன் நட்புறவின் அடையாளமாக இந்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

அதன்படி, இந்த ஆறு மாடி மருத்துவமனையில் 640 படுக்கைகள், ஆறு அறுவை சிகிச்சை கூடங்கள் மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகள், தீவிர சிகிச்சை பிரிவுகள், ஆய்வகங்கள், சிசு தீவிர சிகிச்சை பிரிவுகள், சிறப்பு குழந்தைகள் பிரிவுகள் உள்ளிட்ட அனைத்து நவீன மருத்துவ வசதிகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

32



**இலங்கை அரசியலும் தமிழ் மொழியும் சிங்களமும் தமிழும் அரச கருமமொழிகளாக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை**

சிங்களத்தையும் தமிழையும் சுதேசிய இலங்கையர்கள் பேசி அதனை தமது சுதேசிய மொழி களாகப் பேணிப் பாதுகாத்து வள ர்த்து வந்திருந்த போதிலும் ஐரோ ப்பியர்களின் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் அம் மொழிகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிரு க்கவில்லை.

குறிப்பாக, பிரித்தானியர்களின் ஆட்சிக் காலத்தில் ஆங்கில மொழியே அரச கருமமொழியாக இருந்ததுடன் ஆங்கில மொழிக் கல்வியைப் பெற்றவர்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டு அரச அல்லது பொது நிர்வாகப்பதவிகளும் வழங்கப்பட்டன. அரச விவகாரங் களான பாராளுமன்ற அலுவல்கள், பொதுத்துறை நிர்வாகம், நீதித் துறை மற்றும் நிதியியற் செயற் பாடுகள், பல்கலைக்கழகப் போதனைகள் என்பன ஆங்கில மொழியிலேயே நடந்தேறின.

அப்போது பெரும்பான்மையான சிங்கள மற்றும் தமிழ் மக்கள் ஆங் கில மொழிக்கல்வியை விரும்பாதிரு ந்ததுடன் அது மதமாற்றத்துக்கான க ருவியாக உள்ளது என்ற அபிப் பிராயத்தையும் கொண்டிருந்தனர். அதனால், மிகச்சிறிய தொகையி னரான உயர்குழாமினரே ஆங்கில மொழியில் கல்வியையும் புல மையையும் பெற்றிருந்தனர்.

இவர்களில் அதிகமானவர்கள் கிறிஸ்தவ மதத்துக்கு மத மாற்றம் செய்யப்பட்டவர்களாகவும் இருந் தனர். இந்தச் சூழல்காலப் போக் கில் சுதேசிகளுக்கும் ஆங்கில மொழி யில் கல்வி கற்ற புதிய மத்திய தர உயர்குழாத்தினருக்கும் இடையே முரண்பாடு வலுவடையக்காரண மாகியதுடன் அது அரசியல் பிரச் சினையாகவும் மாறலானது.

மொழி விவகாரம் அரசியல் மயமாக்கப்பட்டதன் காரணமாக சுதந்திரத்துக்கு முன்னரான காலத் திலேயே சிங்கள மற்றும் தமிழ் அரசியல் உயர்குழாமினர் இல ங்கையின் சுதேசிய மொழிகளை முதன்மைப்படுத்த வேண்டும் என்ற சிந்தனையையும் கோரிக் கையையும் முன்னிலைப்படுத்தி அதனை சமூகமாற்றும் அரசியல் சொல்லாடல் தளத்தில் கொண்டு வந்திருந்தனர்.

இச் சிந்தனையானது ஆங்கிலக் கல்வியைக் கற்று அரசியல் மற்றும் நிர்வாகச்சலுகைகளை அனுபவித் திருந்த உயர் குழாமினருக்கான எதிர்ப்பு என்பதாகவே எழுச்சிபெற்றது.

1932 இல் மாத்தறை அரச சட்ட சபை உறுப்பினர் புதிய யோசனை யொன்றை முன்வைத்தார். "நிலை யியற் கட்டளைச் சட்டத்தின் 105 ஆவது வாசகத்தின்படி சபை நட வடிக்கைகள் ஆங்கிலத்தில் இடம் பெறவேண்டிய அதேவேளை ஓர் சட்டசபை உறுப்பினர் சபையின் அங்கீகாரத்துடன் சிங்களத்திலும் தமிழிலும் உரையாற்றமுடியும்."

இதுதொடர்பாக ஆராய்வதற்கென அமைக்கப்பட்ட குழுமேற்படி யோச னையை நிராகரித்தது.ஆனால், இரண்டாம் வாசிப்பின்போது அதிகப் படியான வாக்குகளால் இது அங்கீ கரிக்கப்பட்டது. ஆனால், சிங்கள அல்லது தமிழ் அரச சட்டசபை உறு ப்பினர்கள் இச்சட்டஏற்பாடுகளைமிக அபூர்வமாகவே பயன்படுத்தினர்.

திரு. ஜீ.கே.டப்ளியூ. பெரேரா 1932 இல் முன்வைத்த பின்வரும்யோச னைகள் 90 ஆண்டுகளுக்குப் பின் னர் இன்றைக்கும் பொருத்தமான வையாகும்.

- "சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் உயர்மட்ட அறிவு இல்லாத எவரும் எதிர்காலத்தில் சிவில் சேவைக்கு அல்லது எழுது வினைஞர் சேவைக்கு நியமனம் பெறக்கூடாது."
- "சிங்களம் அல்லது தமிழ் மொழிகளில் தேர்ச்சி பெறாத சிவில் சேவை அல்லது எழுது வினைஞர் சேவை உத்தியோகத்தர்களுக்கு ப்பதவி உயர்வு வழங்கப்படக் கூடாது."
- "சிங்களம் அல்லது தமிழ் மொழியில் வழக்கு விசாரணை களை மேற்கொள்ளமுடியாத அறி க்கையிடமுடியாத எவரும் பொலிஸ் நீதி மன்றத்திலோ அதைவிட உயர் மட்டநீதிமன்றத்திலோ நீதவான் களாகக்கடமையாற்றக்கூடாது."
- "சிங்களத்தில் அல்லது தமி ழில் வழக்கு விசாரணைகளில் பங்கு பற்ற சட்டத்தரணிகளுக்கு அனுமதி வழங் கப்படவேண்டும்."

இப்பிரேரணைகளை செயலா ளர் நாயகத்திற்கும் சட்டமா அதிபரு க்கும் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும்1935 இல் அரச சட்டசபை கலைக்கப்பட்டது. எனவே இப்பிரச்சினை கைவிடப் பட்டது. இன்றும் நிலவும் தட்டிக் கழிக்கும் கலை அன்றிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது.

1936 இல் புதிய அரச சட்ட சபை தெரிவு செய்யப்பட்டது. அன்று அவி சாவலை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட பிலிப்குணவர்தன சிங் கள தமிழ் மொழிப்பாவனையின் முக்கியத்துவம் குறித்து குரலெ ழுப்பினார். அவர் முன்வைத்த யோசனை பின்வருமாறு:

"நீதிமன்றங்களில். கேட்கப்படும் கேள்விகளுக்கும் அதற்கு வழங்க ப்படும் விடைகளில் ஏற்படும் தவறு கள் காரணமாக மக்கள் எதிர் நோக் கும் கஷ்டங்கள் அநீதிகள் என்ப வற்றைத் தவிர்ப்பதற்கு இலங்கை யின் நகரசபை நீதிமன்றங்களினதும் பொலிஸ் நீதிமன்றங்களினதும் நடவடிக்கைகள் சுயபாஷைகளில் இடம்பெறவேண்டும்."

இது சட்டச் செயலாளருக்குச் சமர் ப்பிக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும், மூன்று ஆண்டுகளுக்குள் இதுநடை முறைக்கு வர வேண்டும் என்று அரச சட்டசபையால் அங்கீகரி க்கப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர் பிலிப்குணவர்தன மற்று மொரு பிரேரணையைக் கொண்டு வந்தார். அதாவது:"பொலிஸ்நிலை யங்களில் செய்யப்படும் முறைப் பாடுகள், ஆங்கிலமொழியில் பதியப் படுவதால் பாரதூரமான அநீதிகளும் தவறுகளும் இடம்பெறுகின்றன.

ஆங்கில மொழியையோ சுய பாஷைகளையோ சரியாக அறி யாத பொலிஸ் உத்தியோகத்தர்களே இம் முறைப்பாடுகளைப் பதிவு செய்கி ன்றனர். பொலிஸ்நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் அவை செய்யப்படும் மொழியிலேயே பதியப்பட வேண்டும். "இப் பிரே ரணை 1939.02.09 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

சுயபாஷைகள் பற்றிய மூன்றாவது முயற்சியை அன்றைய களனித் தொகுதியின் உறுப்பினரா ஜே.ஆர். ஜயவர்தனவால் மேற்கொள்ளப் பட்டது. 1943.06.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை பின் வருமாறு:

சிங்களமொழியை நியாயமான கால எல்லையுள் அரச கருமமொழி யாக்குவதற்கு நிலவும் எதிர்ப்பு கார ணமாக பின்வரும் பிரேரணை முன் வைக்கப்பட்டது.

- பாடசாலைகளின் போதனா மொழி சிங்கள மொழியாக அமைய வேண்டும்.
- சகல அரச பரீட்சைகளுக்கும் சிங்கள மொழி கட்டாய பாடமாக இருத்தல் வேண்டும்.
- அரச சட்டசபையின் நடவடிக் கைகள் சிங்கள மொழியிலும் மேற் கொள்ளப்படவேண்டும் என சட்ட மாக்கப்படவேண்டும்.
- வேறு மொழிகளிலிருந்து சிங்கள மொழிக்கு நூல்களை மொழி பெயர்ப்பதற்கும் நூல்களைத் தெரிவு செய்வதற்கும் ஓர் ஆணை க்குழு நியமிக்கப்படவேண்டும்.
- ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு நிலைமாறு வதற்கு ஓர் ஆணைக் குழு நியமிக்கப்படவேண்டும்.

இங்கு "சிங்களமொழி"என்ப தற்குப்பதிலாக "தாய்மொழி" என அமையவேண்டும் என்ற திருத்தம் சீ.டப்ளியு. கன்னங்கரவால் கொண்டு வரப்பட்டது. சிங்கள மொழி என்ற சொல்லுடன் தமிழ் மொழி என்ற சொல்லும் சேர்க்கப்பட வேண்டும் என்ற வீ.நல்லையா கொண்டு வந்த திருத்தத்தை அரச சட்ட சபை அங்கீகரித்தது.

இந்த சுதேசிய மொழிக் கொள் கைக்கான மசோதா சிங்களவர் களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த அரச அவையில் 27 ஆதரவு வாக்குகளுடன் (2எதிரான வாக்குகளுடனும்) 1944. 05.04 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

உண்மையில், சிங்களமும் தமிழும் அரச கரும மொழிகளாக்கப் படல் வேண்டும் என்ற தீர்மான மானது சிங்களவர்களைப்பெரு ம்பான்மையாகக் கொண்டிருந்த அப்போதைய அரச சபையில் மிகப்பெரும் ஆதரவுடன் அதாவது, மிகச்சொற்பளவு எதிர்ப்புடன் நிறை வேற்றப்பட்டமையானது அக் கால த்தில் மொழிக்கொள்கை விடயத் தில் இனமேலோட்டங்களோ பார்வையோ இருந்திருக்கவில்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றது.

சுதேசிய மொழிக் கொள்கை தொடர்பில் கருத்துத்தெரிவித்த அப்போதைய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராகவிருந்த எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயகா இவ் விருமொழிகளையும் அரச கரும மொழிகளாகக் கொள்வதில் எனக்கு எத்தகைய தனிப்பட்ட எதிர்ப்பும் கிடையாது. இதனால், எத்தகைய தீங்கோ, அபாயமோ, இடர்பாடோ ஏற்படும் என்று நான்கருதவில்லை" என்று சுட்டிக்காட்டினார்

அதேபண்டார நாயகாமேலும் கூறுகையில், சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழி களாக ஏற்றுக் கொள்ளல் வேண்டும். அப்பொழுது தான்இந்த நாட்டு மக் கள் தமது சொந்த நாட்டிலேயே அன் னியர்களாக இருக்கும் நிலை ஒழி யும்"என்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 மாணவர்கள்...

ஐந்து பேர் அடங்கிய மாணவர் குழுவொன்று நீராடச் சென்றபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர், சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சம்பவத்தில் பொல்கஹவெல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 9ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். (ம-7,10)

## முல்லை...

முல்லைத்தீவில் இருந்து கடமைகளை முடித்து விட்டு வவுனியா நோக்கிப் பயணித்த பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளரின் வாகனம் வவுனியா, ஓமந்தை, கள்ளிக்குளம் சந்தியை கடந்து பயணித்தபோது எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது டிப்பர் வாகனத்திற்கு முன்னே அதே திசையில் பயணித்த முச்சக்கரவண்டியும் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது.

விபத்தில் வைத்தியர் பயணித்த வாகனம் கடும் சேதமடைந்ததுடன், அதனைச் செலுத்திச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரான வைத்தியர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, விபத்துக்குள்ளான டிப்பர் வாகனத்தின் சாரதி ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,33,60,250,316)

## பாரவூர்தி...

உயிரிழந்தவராவார்.

வடக்கு புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு அருகில் நேற்று மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லாண்ட் மாஸ்டரில் வந்த ஒருவர் அதை வீதியோரம் நிறுத்தி விட்டு, வெற்றிலைப் பாக்கு மென்று கொண்டிருந்தபோது, பாரவூர்தியொன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரைக்கு சென்று விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதில் லாண்ட் மாஸ்டர் சாரதி உயிரிழந்துள்ளார். (ம-7,10,33)

## 33 இந்திய...

36 இந்திய மீனவர்களில் 33 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மற்றைய மூவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த 15 ஆம் திகதி கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களினதும் 17ஆம் திகதி கைது செய்யப்பட்ட 21 பேரினதும் வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது 33 மீனவர்கள் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனை என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, படகோட்டிகளான இருவருக்கு 6 மாத சிறைத் தண்டனையும் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசித்தமையால் அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனையும் விதித்து ஊர்காவற்றுறை நீதவான் ஜெ.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

மூன்றாவது படகின் உரிமையாளர் படகில் இருந்தமையால் அந்த படகினை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-7,10,33)

## 23 ஏக்கர்...

வக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 23 ஏக்கர் காணிகள் மக்கள் பாவனைக்காக நேற்று விடுவிக்கப்பட்டன.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வறுத்தலைவிளான் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 23 ஏக்கர் காணி மீள்குடியேற்றத்திற்காக இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளது.

21 குடும்பங்களுக்கு சொந்தமான 23 ஏக்கர் காணியே விடுவிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் குறித்த காணிகளுக்கான ஆவணங்களை கையளித்திருந்தார்.

இதற்கமைவாக, காணிகளில் தங்கியிருந்த இராணுவத்தினர், அங்கிருந்த தமது தளபாடங்களை அகற்றிய நிலையில், நேற்று வெளியேறிச் சென்றனர். (ம-7,10)

## ரணில் - ராஜ...

மயப்படுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லையென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் ஊடாக அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதிக்கு மக்களாணை கிடையாது.

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதாக இருந்தால் ஜனாதிபதி புதிதாக மக்களாணை பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாமல் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அப்போதைய ரணில் அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என நாமல் சாடியுள்ளார்.

சர்வதேச பிணை முறிகளில் இருந்து 12 பில்லியன் டொலர் கடன்களை பெற்றது. இந்த நிதிக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நிதியும் மாயமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## ஜனாதி...

அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்ட வகையில் நடை[illegible] [illegible] விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாராளுமன்றத் தேர்தலை நடத்துமாறு மகிந்த தலைமையிலான கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## வடக்கின்...

லிருந்து தென்னைகள் விடுபடும் சாத்தியம் உள்ளதாக விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்

இதேவேளை இன்றும் நாட்டில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்தோடு இடியுடன் கூடிய மழையின்போது மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள பொதுமக்கள் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 5432
H 9 2 6 4 3 8
அத சம்பத H 6 4 3 8
சீட்டிழுப்பு இலக்கம் 007
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.03.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1462
R 10 21 54 68 R
Double Chance 46372

மெகா பவர்
திகதி 27/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1780
T 01 41 66 73 79
Double Chance 90972

லக்கி 7 VIP
திகதி 2024.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 0258
B 8 1 0 4 8 6 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3674
சீட்டிழுப்பு திகதி 27.03.2024
P 10 34 60 65
P 21365
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.27
சீட்டிழுப்பு இலக்கம் 0741
கன்னி 02 17 18 26 கன்னி
18127 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.03.2024 வெற்றி வாரம் 140 வர்ணம் பச்சை
O 2 0 5 6 7 6
57321 V
அடுத்த சுப்பர் ஜக்பொட 32,021,292.00
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு இல 2406 வர்ணம் சிவப்பு சீட்டிழுப்பு திகதி 27.03.2024 தினம் புதன்கிழமை
18 24 46 57 Z
82078
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,623,299.20

சனிதா
திகதி 2024.03.27 வெற்றி வாரம் 4567 வர்ணம் வெதா
17 29 31 55 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,368,978.00
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4118 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.03.27 தினம் புதன்கிழமை
10 21 28 32 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 14,920,977.20
38895

E 29 21 22 56 74
1582
2024.03.27 புதன்கிழமை
172659
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 514,383,752.60
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திகதி 2024.03.27 வெற்றி வாரம் 2012 வர்ணம் மஞ்சள்
47 56 61 66 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,716,128.40
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2232
வர்ணம் : ரோஸ்
சீட்டிழுப்பு திகதி : 2024.03.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 102,255,326.40
15 20 54 67 Q
504423


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை

## ஆடைகளின் சாம்ராஜ்யம்
## இந்தியன் செலக்ஷனின்
சித்திரைப் புத்தாண்டு
## ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள், சேட், ரீ சேட், பாட்டி புரொக், லெஹங்கா மற்றும் ஏராளமான ஆடைத் தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்திக்கொள்ளுங்கள்

### விசேட விலைக் கழிவு

ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார்
500/=

இன்று 28.03.2024 முதல்
சித்திரைப் புத்தாண்டு வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

## இந்தியன் செலக்ஷன்

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(275)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0022)

076 825 7716 (ஆகாஸ்)



## கணக்கீடு

புதிய அலகுகள் ஆரம்பம்

S.தவா

- A/L 2024 கம்பனி
- A/L 2025 வங்கிக் கணக்கிணக்கக்கூற்று

◦DCM யாழ்.நகர் சனி 8 A.m ◦NIRU கோண்டாவில் சனி 6 A.m
◦CCA சுன்னாகம் செவ்வாய் 3 P.m ◦ பிரத்தியே வகுப்பு சனி 3 P.m கொக்குவில்

தொடர்பு : 077 239 5858 (277)



## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு (விலை குறைக்கப்பட்டது)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3 ½ பரப்புக் காணி,
இரண்டு வெட்டுக்கிணறுகளுடன் உடன் விற்பனைக்கு உண்டு.
இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு
அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது.
மொத்தமாக 5 கோடியே 25 இலட்சம்
(கிழமை நாட்களில் பார்வையிடலாம்)
தொடர்புகளுக்கு:
+447963743585 (Whatsapp)
021 222 7141 (Sri Lanka)
Email : jamesraj_uk@yahoo.co.lk (225)


## நெல்லியடியில் கசிப்பு நிலையம் முற்றுகை

நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலைய மொன்று முற்றுகையிடப்பட்டது.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் குறித்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டது.

600 லீற்றருக்கும் மேற்பட்ட கோடாவும் கசிப்பு காய்ச்சுவதற்கான உபகரணங்களும் இதன்போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

(ம-7,10,33)


## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-0021)



## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0021)


# 3ம் ஆண்டு நினைவலைகள்



அமரர் **இராசநாயகம் நித்தியானந்தம்**

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 04.10.1957 | 28.03.2021 |

மூன்றாண்டாகியதோ எம் ஒளிவிளக்கே
உமை இழந்து இன்று
ஈரவிழி காயவில்லை
இதயத்தால் நொந்து வாடுகின்றோம்
நித்தம் நித்தம் கனவுதனில்
நீங்கள் வந்து போவதனால்
சிறிது நெஞ்சாறி வாழுகின்றோம்
வேராக இருந்து எம்மை
விருட்சங்களாக்கிய உங்கள்
நேரான பண்புகளை நெஞ்சில் சுமந்தபடி
நீர்காட்டிய வழியில் நடக்கிறோம்
தீராது என்றும் உம் நினைவுகள்...
என்றும் உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மயிலிட்டி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(264)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.